12.8.26 Mcop 177/2024 ம.சா.1 வேலுச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கொத்தனார் வேலை செய்கிறேன். 2ம் மனுதாரரும் கொத்தனார் வேலை செய்து வருகிறார். என் அம்மா இல்லத்தரசியாக உள்ளார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது, எந்த வாகனத்தால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் விபத்து பற்றி கேள்விபட்டேன். என் தகப்பனார் தெருவில் தூங்கிகொண்டிருந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். தெருவில் என் அப்பா தூங்காமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் காரணம் இல்லை என்றால் சரியல்ல. வேறு ஏதோ வாகனத்தால் ஏற்பட்ட விபத்தை இந்த வாகனத்தால் தான் ஏற்பட்டது என பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் ஈடுபடவில்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி,

கூடுதல் சார்பு நீதிபதி,

தென்காசி